# OS.No.21/2023, Dated 09.04.2026

The witness sworn under Oaths Act 1969 on this the day of 9th day of April 2026.

**வா.சா.1 – முருகன் த/பெ. சுப்பரமணியன் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன். எனது வழக்கிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும், பிரதிவாதி புல்டோசரை வைத்து இடிக்க முயன்றதாக குறிப்பிட்டுள்ளதை அவர் எதிர் வழக்குரையில் மறுத்துள்ளார் என்றால் சரிதான். பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை. பஞ்சாயத்து நடந்ததாக சொல்லியிருந்தால் அது தவறுதான். ராமகிருஷ்ணன் நாயுடு அளந்து கொடுக்க வேண்டுமென்று மனு செய்து சர்வேயரிடமிருந்து எனக்கு அறிவிப்பு வந்ததா என்றால் இல்லை. 16.12.2014 அன்றே அறிவிப்பு வந்தது என்றாலும், நான் அந்த இடத்திற்கு சென்று அளந்ததை ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் சரிதான். பிரதிவாதி அவருக்கு தெரிந்த நபரை வைத்து அளந்ததாக ஆட்சேபணை செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாலுக்கா சர்வேரை வைத்து அளக்க வேண்டுமென்று நான் நடவடிக்கை எதாவது எடுத்தேனா என்றால் இல்லை. தாவா கிணறு குறித்து மட்டும் தான் பிரச்சனை என்றால் சரிதான். அந்த கிணறும், கிணறு மேடும் 5 செண்ட இருக்கும். வழக்கு சொத்து என்பது அந்த கிணறும், கிணறு மேடும் மட்டும் தான் என்றால் சரிதான். ஆனால் வழக்கில் 65 1/2 ெ ஹக்டேர் குறித்தும் பிரச்சனை இல்லை என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்து குறித்து மட்டும் மதிப்பீடு செய்திருந்தால் இந்நீதிமன்ற ஆள்வரையில் இவ்வழக்கு வராது என்றாலும், உரிமையியல் நீதிமன்றத்தில் தான் இவ்வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. அந்த 5 செண்டின் மதிப்பு எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் உள்ளபடி தான் தாவா சொத்தும், என்னுடைய சொத்தும் பிரதிவாதியின் சொத்தும் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி மாதிரி வரைபடம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும்

புல வரைபடம் அரசாங்கத்தால் பராமரிக்கப்படும் புல வரைபடம் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தாக்கல் செய்துள்ள மின்சார அட்டையில் மின்வாரிய அதிகாரியின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். ஒரு கிணற்றில் ஒன்றுக் மேற்பட்ட பாகஸ்தர்கள் இருந்தால் அவர்கள் தனி தனியாக மின்சார இணைப்பு பெறலாம் என்றால் சரிதான். நான் ஒரு பாகஸ்தர் என்ற முறையில் தான் எனக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிணறு முழுவதும் என்னுடையது என்று காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணமானது ஒன்றாம் பிரதிாவதி தாவா கிணறு குறித்து குறிப்பிடவில்லை என காட்டுவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் உள்ளதால்தான் அந்த கிணறு குறித்து ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 111/4 ஏ மற்றும் 111/4பி நிலங்களுக்கு தெற்கே உள்ள பிரதிவாதியின் நிலங்கள் பள்ளமாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் உள்ள நிலங்கள் மற்ற நிலங்களை விட நான்கு அடி உயரமாக உள்ளது என்றால் சரிதான். அவர் கிணறு எடுத்துள்ளது பள்ள நிலங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கு தான் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.04.09 19:29:02 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி